**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மாதவரம்**

**<u>OS.07./2020</u>**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கபட்டு சாட்சியின் வாக்குமூலம் 02.08.2022 -ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

பெயர் - பழனிசாமி வயது 74

தந்தை பெயர் - முத்துகருப்புதேவன் இனம் -இந்து

கிராமம் W83/2A , East Main Road,Anna nagar,West Extension
வட்டம் சென்னை 101

வ.சா.1

**<u>வாதி தரப்பு சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 4வது பிரதிவாதி தரப்பில் செய்யப்படும் குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் வாதியின் முகவர் ஆக வந்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரிதான். வாதி நலமுடன் தான் உள்ளார். வெளியூரில் உள்ளதால் என்னை சாட்சி சொல்ல முகவராக அனுப்பியுள்ளார். வாதியின் முகவரி எனக்கு சரியாக தெரியாது. வேலூாரில் உள்ளார். வாதியை இந்த வழக்கில் விசாரிக்கபோவதில்லை என்றால் சரிதான். நான் தான் பவர் ஏஜென்டாக சாட்சிசொல்ல வந்துள்ளேன் . என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்ட காரணத்தினால் தான் வாதி இந்நீதிமன்றத்திற்கு வந்து சாட்சி சொல்ல இயலவில்லை என்று சொன்னால் அதைபற்றி குறிப்பிடவில்லை. பவர் ஆப் அட்டார்னி ஆவணமாக குறியிடுசெய்யபட்டுள்ளதா என்றால தாக்கல் செய்யப்பட்டுள்ளது.என்னிடம் காட்டப்படும் பவர் ஆப் அட்டார்னி எனக்கு சாட்சி சொல்ல வாதியால் கொடுக்கபட்ட பத்திரம் என்றால் சரிதான். அந்த பவர் ஆப் அட்டார்னி எ.ம.சா.ஆ1 ஆகும். இந்த ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபடவில்லை என்றால் சரிதான். எ.மா.சா.ஆ1 ல் எனக்கு நீதிமன்றத்தில் சாட்சி அளிக்கவோ வழக்கறிஞர் நியமனம் செய்யவோ எனக்கு அதிகாரம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.அதில் உள்ளது. அந்த மாதிரி எந்த சரத்தும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் எ.மா.சா.ஆ1 அடிப்படையில் நான் சாட்சி சொல்ல தகுதியல்ல என்றால் சரியல்ல. எ.மா.சா.ஆ1ல் குறிப்பிட்ட காரணத்தினால் தான் வாதி இந்நீதிமன்றத்திற்கு வந்து

சாட்சி சொல்ல இயலவில்லை என்று குறிப்பிடவில்லை என்றால் இல்லை.தாவா சொத்து தற்போது காலி நிலமாக தான் உள்ளது என்றால் சரிதான்.எ.மா.சா.ஆ1 ல் என்ன காரணத்திற்காக எ.மா.சா.ஆ 1 கொடுக்கபட்ட விவரம் என்ற வாசகம் அடிக்கபட்டுள்ளது அந்த காரணம் என்னவென்று எனக்கு தெரியாது. எ.ம.சா.ஆ.1 ல் 2வது பக்கத்தில் தாவா சொத்தில் கட்டுமான பணி செய்யப்பட்டு என்று சொல்லி இருந்தால் அது தவறு.எ.மா.சா.ஆ1 ல் கொடுக்கபட்டடு 2012 ஆண்டுக்கு முன்பு தாவா சொத்தின் சம்மந்தமாக நடந்த சம்பவங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆவணங்கள் மூலம் தான் தெரியும். 15.04.2013 ல் திருவொற்றியூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தபோது தனிதனியாக நீதிமன்ற கட்டணம் நிர்ணயம் செய்யவேண்டும் என்று அறிவிப்பு கொடுக்கபட்டது பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு நீதிமன்ற அறிவிப்பிற்கு பின்பும் நீதிமன்ற கட்டணம் திருத்தி செலுத்தாததால் இந்த வழக்கு நிலைக்கதக்க வழக்கு என்றால் சரியல்ல. நீதிமன்ற அறிவிப்பை உங்கள் வழக்கறிஞர் பெற்றும் உங்களுக்கு தெரியாது என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.